MCOP 139/2014
ம.சா.1 பூர்ணிமா க/பெ மோகன்ராஜ்
நாள் 07.02.2025

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என் கணவருக்கு விபத்து நடந்தது குறித்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்தில் என் கணவர் இறந்து விட்டார். எவ்வளவு இழப்பீடு கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. விபத்து சமயத்தில் என் கணவர் இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றால் சரிதான்.

2. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். விபத்து சமயத்தில் என் கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார்.

3. 1ம் எதிர்மனுதாரர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர் தான் என் கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியவர் ஆவார். விபத்து ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரருக்கு அவர் ஓட்டி வந்த வாகனம் குறித்த ஆவணங்கள் சரியாக உள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

4. விபத்து நடந்த தேதி எனக்கு நினைவில்லை. விபத்து குறித்து புகார் கொடுக்கப்பட்டுள்ளது. புகாரை நான் கொடுக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கானது ஆரணி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று அந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் விடுதலை செய்யப்பட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. உண்மையிலேயே 1ம் எதிர்மனுதாரர் தான் விபத்திற்கு காரணமாக இருந்திருந்தால் விபத்து குறித்து அவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் அவர் விடுதலை செய்யப்பட்டிருக்க மாட்டார் என்றும் அவ்வாறு 1ம் எதிர்மனுதாரர் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் காரணம் அல்ல என்றும் என் கணவர் தான் விபத்து சமயத்தில் அவரது வாகனத்தை சரியாக ஓட்டி செல்லாமல் விபத்தை அவரே ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல.

6. விபத்தில் சம்மந்தப்பட்ட என் கணவரின் இரு சக்கர வாகனம் குறித்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து நேரத்தில் 1ம் எதிர்மனுதாரர் தனது வாகனத்தில் சரியாக தான் ஓட்டி வந்தார் என்றும் என் கணவரின் கவனக்குறைவினால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் அதனால் 1ம் எதிர்மனுதாரரை பொறுத்த வரையில் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் குடிபோதையில் வந்தார்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 1ம் மனுதாரர் நான் ஆவேன். 2மற்றும் 3ம் மனுதாரர்கள் என் மகன்கள் ஆவார்கள். 4ம் மனுதாரர் என் மாமியார் ஆவார். 5ம் மனுதாரர் என் மாமனார் ஆவார். 4 மற்றும் 5ம் மனுதாரர்கள் தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

2. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது. புகாரை நான் கொடுத்தேனா என்றால் இல்லை. விபத்து சமயத்தில் என் கணவர் ஓட்டிச்சென்ற வாகனம் அவருக்கு சொந்தமான வாகனம் என்றால்

சரிதான். விபத்து சமயத்தில் என் கணவரின் வாகனம் எந்த காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது.

3. விபத்து சமயத்தில் என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. விபத்து சம்மந்தப்பட்ட 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு இருசக்கர வாகனம் ஓட்டிச்செல்வதற்கான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் என் கணவருக்கு 41 வயது.

4. விபத்து சமயத்தில் என் கணவர் பட்டு சேலை நெசவு செய்து வந்தார். அவ்வாறு என் கணவர் பட்டு சேலை நெசவு செய்து வந்தார் என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

5. என்னிடம் காட்டப்படும். ம.சாஆ4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 1ம் மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ஆஜர் படுத்தப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவருக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் 1ம் எதிர்மனுதாரருக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் இருவரும் ஓட்டத்தெரியாமல் வாகனத்தை ஓட்டி விபத்து ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

6. என் கணவருக்கு 41 வயது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ3 பிரேத கூர்ஆய்வு அறிக்கையில் என் கணவருக்கு 41 வயது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 5ம் பத்தியில் மேற்படி விபத்தின் போது என் கணவருக்கு 36 வயது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

7. என் கணவர் நான் சொல்வது போல் பட்டு சேலை நெசவு செய்து வியாபாரம் செய்ய வில்லை என்றும் என் வீட்டில் சும்மா தான் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்மந்தப்பட்ட 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதாலும் அவர் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருப்பதாலும் என் கணவரின் இறப்பிற்கு இழப்பீடு வழங்க 1ம் எதிர்மனுதாரர் தான் கடமை பட்டவர் என்றும் சொன்னால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்தவரையில் இந்த மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.